## சுருக்கம்

பள்ளிக் கல்வித் துறை – மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு – அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகளுக்கு பல்வேறு புதிய அம்சங்களை உள்ளடக்கிய மேம்படுத்தப்பட்ட திறன் அட்டைகள் (Smart cards) வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வி(ப.க.7–2)த் துறை**

**அரசாணை (நிலை) எண்.214**

**நாள் 15.10.2018**
**திருவள்ளுவர் ஆண்டு – 2049**
**விளம்பி, புரட்டாசி–29**
**படிக்கப்பட்டவை :**

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 01.06.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு.
2. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.14288/எப்/2017, நாள் 08.06.2018 மற்றும் 09.08.2018.

*******

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி எண்.110–ன் கீழ் 01.06.2018 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கீழ்க்கண்டவாறு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது:-

> "புதிய திறன் அட்டை (Smart Card) நடப்பு கல்வியாண்டில் அரசு மற்றும் அரசு நிதியுதவி பெறும் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவிகளுக்கும் வழங்கப்படும்".

2. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேற்கண்ட அறிவிப்பினை செயல்படுத்திட ஏதுவாக, மேலே இரண்டாவதாக பெறப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் பின்வருமாறு கருத்துரு அனுப்பியுள்ளார்:-

I) மாணவர்களுக்கு வழங்கப்படும் திறன் அட்டை கீழ்க்கண்ட வகையில் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும் என தெரிவித்துள்ளார்.

i. திறன் அட்டையில் உள்ள க்யூ ஆர் கோடு (Q R Code) அல்லது பார் கோடு (Bar Code) வாயிலாக மாணவர் சம்பந்தப்பட்ட அனைத்து தகவல்களையும் கல்வி தகவல் மேலாண்மை முகமையின் பொதுத் தொகுப்பிலிருந்து இணையதளத்தின் வாயிலாக தகவல்களைப் பெறமுடியும்.

ii. வழங்கப்பட்ட திறன் அட்டையின் அடிப்படையில் மாணவர்கள் பள்ளி நேரங்களில் பள்ளி வளாகத்தை விட்டு வெளியில் இருக்கும் சூழலில் எந்த பள்ளியில் படிக்கிறார்கள் என்பதை கண்டறிய இயலும்.

iii. மாணவர்களின் இரத்தப் பிரிவு சார்ந்த விவரம் திறன் அட்டையில் இருப்பதால் மாணவர்களுக்கு எதிர்பாராத விபத்து ஏற்படும் போது அந்த மாணவர்களுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பதற்கு பெரிதும் உதவும்.

iv. மாணவர்கள் திறன் அட்டை அணியும்பொழுது தன்னம்பிக்கை மிகுந்தவர்களாக தங்களை உணர்கிற வாய்ப்பு ஏற்படும்.

v. மாணவர்கள் இடைநிற்றலை துல்லியமாக கண்டறிய இயலும்.

II) மேலும், பள்ளிக் கல்வி இயக்குநர், அரசுத் துறையின் கீழ் உள்ள 37358 தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 46,60,965 மாணாக்கர்களுக்கும், அதே போன்று 8386 அரசு உதவிபெறும் / பகுதி உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 23,99,017 மாணாக்கர்களுக்கும் ஆக மொத்தம் 70,59,982 மாணாக்கர்களுக்கு திறன் அட்டை வழங்கப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார்.

III) ஒரு திறன் அட்டையில் மாணவரின் கீழ்க்கண்ட விவரங்கள் இடம் பெறும்.

1. மாணாக்கரின் பெயர் (Name)
2. மாணாக்கரின் ஆளறிதழ் (Student ID)
3. பிறந்த தேதி (Date of Birth)
4. தந்தையின் பெயர் (Father's Name)
5. முழு முகவரி (Complete Address)
6. பள்ளியின் பெயர் (Name of the School)
7. திறன் அட்டை வழங்கப்பட்ட ஆண்டு (Card Issuance Year)
8. மாணாக்கரின் புகைப்படம் (Photograph of the student)
9. இரத்த வகை (Blood Group)
10. கல்வித் தகவல் மேலாண்மையில் பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து விவரங்களுடன் பார் கோடு அல்லது க்யூ ஆர் கோடு (Bar Code or QR Code)

IV) அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களின் சுய விவரங்கள் கல்வி தகவல் மேலாண்மை அமைப்பில் (Education Management Information System) உள்ளீடு செய்யப்பட்டுள்ளது எனவும் மாணவ/ மாணவியர்களின் சுய விவரங்கள்அடங்கிய மென்பொருள் (Smart Card Application) உருவாக்கப்பட்டு பயன்பாட்டிற்கு தயார் நிலையில் உள்ளது எனவும் பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

V) மேலே தெரிவிக்கப்பட்ட நிலையில், இத்திட்டத்தினை செயல்படுத்திட ஏதுவாக, உரிய ஒப்பந்த புள்ளி விதிகளை கடைபிடித்து ஒப்பந்த புள்ளிகள் கோரி, திறன் அட்டை தயாரித்திடும் பணியை முழுமையாக நடைமுறைப்படுத்திட மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் (Tamil Nadu Text Book & Educational Services Corporation) அவர்களுக்கு அதிகாரம் வழங்கிட ஆணையும், இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஆகும் செலவினமான ரூ.12,70,79,676.00/– (ரூபாய் பன்னிரண்டு கோடியே எழுபது இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று எழுபத்தி

ஆறு மட்டும்) அனுமதித்து ஆணையும் வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசை கோரியுள்ளார்.

3. மேலே பத்தி 2–இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் பரிசீலித்து அதனை ஏற்கலாம் என முடிவு செய்து, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 70,59,982 மாணவர்களுக்கு திறன் அட்டைகள் வழங்கும் திட்டத்தினை செயல்படுத்துவதற்கு ஏதுவாக ரூ.12,70,79,676/–க்கு (ரூபாய் பன்னிரண்டு கோடியே எழுபது இலட்சத்து எழுபத்து ஒன்பதாயிரத்து அறுநூற்று எழுபத்தி ஆறு மட்டும்) நிதி ஒப்புதல் வழங்கியும் மேலும், உரிய ஒப்பந்த புள்ளி விதிமுறைகளை கடைபிடித்து ஒப்பந்த புள்ளிகள் கோரி, திறன் அட்டை தயாரித்திடும் பணியை முழுமையாக நடைமுறைப் படுத்திட மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் அவர்களுக்கு அதிகாரம் வழங்கியும், ஆணையிடுகிறது.

4. இத்திட்டத்திற்கான செலவினம் கீழ்க்கண்ட புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

> "2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 101 ஆய்வு – மாநிலச் செலவினங்கள் AC – அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களுக்கு திறன் அட்டைகள் வழங்குதல் – 24 – பொருள்களும் வழங்கலும் (ததொகு 2202 02 101 AC 2402)"

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினம் ஒரு "புதிய துணைப் பணி" (New INSTRUMENT OF SERVICE) குறித்ததாக கருதப்படும், துணை மதிப்பீடுகளில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் நாளடையில் பெறப்படும். சட்டபேரவையின் ஒப்புதல் பெறப்படும் வரை இச்செலவினம் முதற்கண் எதிர்பாரா செலவு நிதி (Contigency Fund) முன்பணம் மூலம் மேற்கொள்ளப்படும். அடுத்த துணை மானியக் கோரிக்கை வரை தேவைப்படும் சரியான தொகையினை கணக்கிட்டு எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ஒப்புதல் செய்ய தமிழ்நாடு எதிர்பாரா செலவு நிதி விதிகள், 1963–ன் இணைப்பில் உள்ள படிவம் "அ" வின் படி இவ்வரசாணையுடன் நிதித் (வரவு செலவு பொது–1) துறைக்கு விண்ணப்பிக்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். மேலும், இச்செலவினத்தை 2018–2019ம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கைகளில் சேர்க்கும் பொருட்டு, உரிய செயற்குறிப்பினை உரிய நேரத்தில் தவறாது அரசின் நிதி (வசெபொ–I)/ (கல்வி–II) துறைக்கு அனுப்பிட பள்ளிக் கல்வி இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதித் துறையின் அ.சா.கு.எண்.4909/கல்வி–II/2018, நாள்.08.10.2018 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1519 (ஆயிரத்து ஐநூற்று பத்தொன்பது)இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்க கல்வி இயக்குநர், சென்னை–6.
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும்
கல்வியியல் பணிகள் கழகம், சென்னை–6.

மாநில கணக்காயர், சென்னை–18/35.
ஆணையர், கணக்கு மற்றும் கருவூலம், சென்னை–35.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை.

நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களின்
நேர்முக உதவியாளர், சென்னை–9.
பள்ளிக் கல்வித் துறை, முதன்மைச் செயலாளரின்
முதுநிலைத் முதன்மைச் தனிச் செயலர், சென்னை –9.
நிதி (கல்வி–II) (வ.செ.பொ–I, II)த் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.
இ.கோ./ உதிரி நகல்

/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்
15/10/18